செய்தி வெளியீடு எண்: 175 நாள்: 27.02.2019

# செய்தி வெளியீடு

## ‘சொற்குவைத்’ திட்டம் –அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்

கற்காலம் தொடங்கி கணினிக் காலம் வரை தமிழுக்குப் பெருமை சேர்ப்பது அதன் தனிப்பெரும் சொல்வளமே. அத்தகைய தமிழ்மொழியின் சொல்வளத்தை ஒன்று திரட்டி, ஓரிடத்தில் வழங்கும் உயரிய நோக்கத்தோடு, ‘சொற்குவைத்’ திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

**28.06.2018** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண்.**110**இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

‘‘ஆங்கில மொழி அறிஞர்கள், ஆங்கில மொழிச் சொற்களைத் தொகுத்தல் முறையில் அணியமாக்கி, மொழி ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களுக்கு வழங்கி வருகின்றனர். அதுபோல், உலகின் பழமையான மொழிகளுள் மூத்த மொழியாகக் கருதப்படும் நம் தமிழ் மொழியிலும் அத்தகைய தொகுப்புத் தேவை என்பதை உணர்ந்து, **“சொற்குவை”** என்ற திட்டம் தொடங்கப்படும். இதில், தமிழில் உள்ள சொற்கள் அனைத்தையும் தொகுத்து நிரல்படுத்துதல், சொற்களின் இலக்கண வகைப்பாடுகளைப் பதிவு செய்தல், நிகரான சொற்களுக்கான பொருள் விளக்கத்தைத் தேடும் வசதியை அமைத்துக் கொடுத்தல், அடிக்கடி தேடப்படும் சொற்களுக்கு வண்ண அடையாளம் கொடுத்தல், வந்த சொல்லே மீளவும் வராமல் தடுத்தல் மற்றும் புதிய சொற்களைப் பதிவு செய்தல் போன்ற வசதிகள் உருவாக்கப்பட்டு, அவை இணையதளப் பொது வெளியில் உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் மொழியியல் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்படும். இதற்கென ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்’’.

அந்த வகையில், ‘சொற்குவைத்’ திட்டத்திற்கான வலைத்தளம் உருவாக்கப்பட்டு, உலகம் முழுவதிலுமுள்ள தமிழார்வலர்கள், பல்துறை சொல்லாக்க வல்லுநர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உருவாக்கித் தரும் புதிய கலைச்சொற்கள் ‘சொற்குவைத்’ திட்டத்திற்கான வலைத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு, மொழி வல்லுநர்களால் ஏற்பளிக்கப்பட்டபின், இணையதளப் பொது வெளியில் மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன், ‘சொற்குவைத்’ திட்டத்தின் ஒரு பகுதியாக, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் **‘கட்டணமில்லா அழைப்பு மையம்’** அமைக்கப்படவுள்ளது. அதன் மூலம் உலகின் எந்தவொரு மூலையிலிருந்தும் யார் வேண்டுமானாலும் எந்நேரமும் தொடர்புகொண்டு, தமிழ்ச் சொற்கள் தொடர்பான ஐயங்களைச் சொல்லி உரிய விளக்கம் பெற்றுத் தெளிவு பெற முடியும்.

மேலும், வளர்ந்து வரும் இளந்தலைமுறையினரிடம் ‘சொற்குவைத்’ திட்டம் பற்றியும், அகராதியியல் மற்றும் கலைச்சொல்லாக்கம் பற்றியும் விழிப்புணர்வை விதைக்கும் வகையில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் மாதம் ஒரு விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டு வருகிறது.

அந்தக் கருத்தரங்கங்களில் சொல் உண்டியல் வைக்கப்பட்டு, மாணவர்கள் உருவாக்கும் புதிய தமிழ்க் கலைச்சொற்கள் அதில் பெறப்படுகின்றன. அவற்றிலிருந்து வல்லுநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கலைச்சொற்களை உருவாக்கிய முதல் மூன்று மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழர் பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களும், தமிழறிஞர்களும், பொதுமக்களும் உருவாக்கித் தரும் உழவியல், உளவியல், ஊடகவியல், கல்வியியல், கணினியியல், வானியல் உள்ளிட்ட பல்துறை சார்ந்த புதிய தமிழ்க் கலைச்சொற்கள் ‘சொற்குவைத் திட்டத்தில்’ பதிவு செய்யப்படவுள்ளன. அத்துடன் தமிழ் மொழியிலுள்ள அனைத்துச் சொற்களையும் ஓரிடத்தில் ஒருங்கு திரட்டி இளம்தலைமுறையினரின் அறிவுத்தளத்திற்கு வழங்கப்படவுள்ளன.

அவ்வாறு பதிவு செய்யப்படும் தூய தமிழ்ச் சொற்களைக் கல்வித்துறையினரும், மாணவர்களும், ஊடகத் துறையினரும், அரசுத் துறையினரும், தமிழார்வலர்களும், பொது மக்களும் தங்களின் அன்றாட மொழிப் பயன்பாட்டில் பயன்படுத்த வேண்டும் என்பதும், தமிழின் தனிப்பெரும் சொல்வளத்தைக் காப்பதும்; அன்னைத் தமிழ்மொழியை அண்டை மொழிகளின் வல்லாண்மைப் பிடியிலிருந்து மீட்பதுமே ‘சொற்குவைத்’ திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

அந்த உயரிய நோக்கத்தோடு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின்வழி செயற்படுத்தப்படவுள்ள ‘சொற்குவைத்’ திட்டம் பற்றியும், அகராதியியல் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சென்னை, மாநிலக் கல்லூரித் திருவள்ளுவர் அரங்கில் ‘சொற்குவைத்’ திட்டம் – அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் **28.02.2019** வியாழக்கிழமை காலை **10.00** மணி முதல் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழர் பண்பாட்டுத்துறை அமைச்சர் **திரு. க. பாண்டியராசன்** அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றவும், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றவும் இசைந்துள்ளார்கள்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்கள் கருத்தரங்கத்தின் நோக்கவுரையாற்ற, மாநிலக் கல்லூரி முதல்வர் **முனைவர் இரா. இராவணன்** அவர்கள் தொடக்கவுரையாற்றவுள்ளார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் **முனைவர் கோ. பாலசுப்பிரமணியன்** அவர்களும், சென்னை கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் இயக்குநர் **முனைவர் இரா. சாருமதி** அவர்களும் வாழ்த்துரை வழங்கவுள்ளார்கள்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் **மருத்துவர் சுதா சேசையன்** அவர்கள் 'தமிழில் மருத்துவக் கலைச்சொற்கள்' என்ற தலைப்பில், சென்னை செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத் துணைத் தலைவர் **முனைவர் தெ. ஞானசுந்தரம்** அவர்கள் 'மொழியாக்கம்' எனும் தலைப்பிலும் கருப்பொருளுரை வழங்கவுள்ளார்கள்.

மேலும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர் **முனைவர் இ. சுந்தரமூர்த்தி** அவர்கள் 'தமிழ்க் கலைச்சொல்லாக்கம்' எனும் தலைப்பிலும், கார்க்கி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் **முனைவர் மதன் கார்க்கி** அவர்கள் 'மின் அகராதி உருவாக்கம்' எனும் தலைப்பிலும் கருப்பொருளுரை ஆற்றவுள்ளார்கள்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், மொழியியலறிஞர்கள், அகராதியியல் வல்லுநர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பிக்கவிருக்கும் இக்கருத்தரங்கில், தங்கள் ஊடகத்தின் (தொலைக்காட்சி/செய்தித்தாள்) செய்தி ஆசிரியரையும் தவறாது பங்கேற்க அழைப்பதோடு, இக்கருத்தரங்கம் குறித்த செய்திகள் மக்களிடம் சென்று சேர ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**